செய்தி வெளியீடு எண்: 68 / 2019 நாள்: 22.07.2019

மாவட்ட அளவில் இறகுபந்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தேர்வுப் போட்டிகள் வருகின்ற 25.07.2019 அன்று காலை 8.00 மணியளவில் அண்ணா விளையாட்டரங்கம் திருச்சிராப்பள்ளியில் நடைபெறவுள்ளது.
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அதிக அளவில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அரசு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், இறகுபந்து அகாடமி 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டுக்கான தேர்வுப் போட்டிகள் மாவட்ட அளவில் இறகுபந்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வருகின்ற 25.07.2019 அன்று காலை 8.00 மணியளவில் அண்ணா விளையாட்டரங்க உள்விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இந்த அகாடமியில் சேருவதற்கு, 16 வயதிற்குட்பட்ட சிறப்பாக விளையாடி வரும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 15 நபரை தேர்வு செய்து அவர்களுக்கு மாதத்தில் 25 நாட்கள் காலை, மாலை இருவேளைகளிலும் இறகுபந்து பயிற்றுநரை கொண்டு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் / வீராங்கனைகள் கலந்து கொள்ளும் வண்ணம் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தேர்வுப் போட்டிகளில் கலந்துகொள்ள தகுதிகள்

- 16 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- தேர்வுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர் / வீராங்கனைகள் 01.01.2003 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். இதற்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
- மாவட்ட அளவிலான இறகுபந்து அகாடமி தேர்வுபோட்டிகளில் கலந்து கொள்பவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் ( Ration Card Xerox / Birth Certificate / School Bonafide Certificate) attestation-னுடன் சமர்ப்பித்தால் மட்டுமே தேர்வுப் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
- இறகுபந்து அகாடமி தேர்வுப்போட்டிகளில் கலந்துகொண்டு தேர்வு செய்யப்படும் 15 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சிறந்த பயிற்றுநர்கள் கொண்டு தினசரி பயிற்சி வகுப்புகளும், நாளொன்றுக்கு ஒரு நபருக்கு சிற்றுண்டி செலவினத்திற்காக ரூ.30 மற்றும் போக்குவரத்து கட்டணமாக ரூ.20/– வழங்கப்படும் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள் (Racket, shuttle cocks, Training equipments, Track-Suit, T-Shirts, Shorts, Warm-up shoes & Badminton shoes) அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம் திருச்சிராப்பள்ளி (தொலைபேசி எண்.0431–2420685) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட அளவிலான இத்தேர்வுப்போட்டிகளில் மாவட்டத்திலுள்ள 16 வயதிற்குட்பட்ட இறகுபந்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருச்சிராப்பள்ளி